ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.6 – சிங்கமதாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.6 – சிங்கமதாய்

‡ சிங்கமதாய் அவுணன் ⋆
திறல் ஆகம் முன் கீண்டுகந்த ⋆
சங்கம் இடத்தானைத் ⋆
தழல் ஆழி வலத்தானை ⋆
செங்கமலத்தயன் அனையார் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
அங்கமலக் கண்ணனை ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ‖ **7.6.1** ‖

கோ ஆனார் மடியக் ⋆
கொலை ஆர் மழுக் கொண்டருளும் ⋆
மூவா வானவனை ⋆
முழு நீர் வண்ணனை ⋆
அடியார்க்காவா ! என்றிரங்கித் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
தேவாதி தேவனை ⋆
யான் கண்டு கொண்டு திளைத்தேனே ‖ **7.6.2** ‖

உடையானை ⋆
ஒலி நீர் உலகங்கள் படைத்தானை ⋆
விடையான் ஓட அன்று ⋆
விறல் ஆழி விசைத்தானை ⋆
அடையார் தென் இலங்கை அழித்தானை ⋆

அணி அழுந்தூர் உடையானை ⋆
அடியேன் ⋆
அடைந்துய்ந்து போனேனே ॥ **7.6.3** ॥

குன்றால் மாரி தடுத்தவனைக் ⋆
குல வேழம் அன்று பொன்றாமை ⋆
அதனுக்கருள் செய்த ⋆
போர் ஏற்றை ⋆
அன்றாவின் நறு நெய் அமர்ந்துண்ண ⋆
அணி அழுந்தூர் நின்றானை ⋆
அடியேன் ⋆
கண்டு கொண்டு நிறைந்தேனே ॥ **7.6.4** ॥

கஞ்சனைக் காய்ந்தானைக் ⋆
கண்ண மங்கையுள் நின்றானை ⋆
வஞ்சனப் பேய் முலையூடு ⋆
உயிர் வாய் மடுத்துண்டானை ⋆
செஞ்சொல் நான்மறையோர் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
அஞ்சனக் குன்றம் தன்னை ⋆
அடியேன் கண்டு கொண்டேனே ॥ **7.6.5** ॥

பெரியானை ⋆
அமரர் தலைவற்கும் பிரமனுக்கும் ⋆
உரியானை உகந்தான் அவனுக்கும் ⋆
உணர்வதனுக்கரியானை ⋆
அழுந்தூர் மறையோர்கள் ⋆
அடி பணியும் கரியானை ⋆

அடியேன் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.6** ॥

திருவாழ் மார்வன் தன்னைத் ⋆
திசை மண் நீர் எரி முதலா ⋆
உருவாய் நின்றவனை ⋆
ஒலி சேரும் மாருதத்தை ⋆
அருவாய் நின்றவனைத் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
கருவார் கற்பகத்தைக் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.7** ॥

நிலை ஆள் ஆக ⋆
என்னை உகந்தானை ⋆
நிலமகள் தன் முலையாள் வித்தகனை ⋆
முது நான்மறை வீதி தொறும் ⋆
அலை ஆரும் கடல் போல் முழங்கும் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
கலை ஆர் சொற்பொருளைக் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.8** ॥

‡ பேரானைக் ⋆
குடந்தைப் பெருமானை ⋆
இலங்கொளி சேர் வாரார் வனமுலையாள் ⋆
மலர் மங்கை நாயகனை ⋆
ஆரா இன் அமுதைத் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆

கார் ஆர் கருமுகிலைக் ⋆
கண்டு கொண்டு களித்தேனே ॥ **7.6.9** ॥

‡ திறல் முருகன் அனையார் ⋆
தென் அழுந்தையில் மன்னி நின்ற ⋆
அற முதல்வன் அவனை ⋆
அணி ஆலியர் கோன் மருவார் ⋆
கறை நெடு வேல் வலவன் ⋆
கலிகன்றி சொல் ஐ இரண்டும் ⋆
முறை வழுவாமை வல்லார் ⋆
முழுதாள்வர் வான் உலகே ॥ **7.6.10** ॥

அடிவரவு — சிங்கம் கோ உடையானை குன்றால் கஞ்சனை பெரியானை திருவாழ் நிலை பேரானை திறல் திரு

சிங்கமதாய் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்